இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 25 ISSUE 01 JANUARY 2025

ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-

## அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



## தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவை நிறைவாக்குவார்

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிக்கை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்

WWW.JESUSLIVES.IN

# ISRAEL - BIBLE LAND TOUR

# 2025




சகோதரர். L. வின்செண்ட்ராஜ் மற்றும்
சகோதரி. கலாவின்செண்ட்ராஜ் அவர்களுடன்

## இஸ்ரேல், ஜோர்டன், எகிப்து

## மே 1–10

(10 நாட்கள்)








### எங்களோடு வேதாகம தேசத்திற்கு வாருங்கள்

- தினமும் அதிகாலை பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் நிறைந்த ஆராதனை,
- யோர்தான் நதிக்கரையில் ஆராதனை,
- இயேசு கிறிஸ்து ஊழியம் செய்த இடங்கள்,
- இயேசு அற்புதம் செய்த பரிசுத்த ஸ்தலங்கள்,
- கெத்செமனே தோட்டத்தில் ஜெப நேரங்கள்,
- பத்து கற்பனைகளைப் பெற்ற சீனாய் மலை,
- கலிலேயா கடலில் தேவனைத் துதித்தல்,
- நைல் நதியில் படகு சவாரி.



**94428 00449**

தொடர்புக்கு:

**94428 00449,**
**94428 00447, 94980 00449**

உடனே உங்கள் பாஸ்போர்ட் நகலை எங்கள் அலுவலக
வாட்ஸ்அப் எண்ணிற்கு
அனுப்பி முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.

45 நபர்களுக்கு மட்டுமே அனுமதி

(சென்னையில் இருந்து புறப்பட்டு மீண்டும்
சென்னை வரும் வரை
அனைத்து செலவுகளும் உட்பட)

# ஆசிரியர் மடல்

**ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.**

தேவனுடைய பெரிதான கிருபையினாலும், இரக்கத்தினாலும் மீண்டும் ஒரு புதிய வருஷத்தைக் காண தேவன் நமக்கு கிருபை செய்தார். இந்த புதிய வருஷத்திலே நாம் ஆண்டவருக்கு மிகுந்த கனி கொடுக்க, பலன் கொடுக்க நம்மை அர்ப்பணித்து செயல்பட வேண்டும். இந்த வருஷத்திலும் தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தை, நாம் இதுவரை அறிவியாத இடங்களில் அறிவிக்க, பாரத்தோடு செயல்பட மிகுந்த பிரயாசப்படுகிறோம். அதற்காகத் தான் நாங்கள் சுவிசேஷ பயிற்சி முகாம்களை நடத்தி, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவிக்க சுவிசேஷகர்களை எழுப்புகிறோம். காரிருள் பூமியை மூடுவதற்கு முன்பாக, நாம் கர்த்தருடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தை, ஒளியைப் பரப்பி விட வேண்டும். இருளில் இருக்கின்ற ஜனங்களுக்கு கொண்டு போய் சேர்த்து விட வேண்டும். திறந்த வாசல் இருக்கும் போதே நாம் இன்னும் அதிகமாக செயல்பட, தேவனுக்காக பயன்பட ஜெபிக்க வேண்டும். கர்த்தருக்குச் சித்தமானால் இந்த வருஷத்திலே பல சுவிசேஷ கூட்டங்களையும், உபவாச முகாம்களையும் நடத்தி எழுப்புதல் சுவிசேஷத்தைப் பரப்ப இருக்கிறோம். மதுரையிலும், வானத்தின் வாசல் ஜெப மையத்திலும் நடத்தி வருகின்ற உபவாச ஜெபங்களை தேவன் ஆசீர்வதிக்க ஜெபித்துக் கொள்ளுங்கள். இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் ***YOUTUBE*** சேனலில் ஒளிபரப்பாகின்ற எல்லா நிகழ்ச்சிகளையும் தேவன் ஆசீர்வதிக்கவும், இதன் மூலம் அநேக மக்கள் இரட்சிப்படைய ஜெபியுங்கள். தேவனுடைய மாறாத கிருபை இந்த வருடம் முழுவதும் உங்களையும், உங்கள் குடும்பத்தையும் வழிநடத்த ஜெபித்துக் கொள்கிறோம். தொடர்ந்து எங்களுக்காக, ஊழியங்களுக்காக உங்கள் ஜெபத்தினாலும், உதாரத்துவமான காணிக்கையினாலும் தாங்கி ஆதரியுங்கள். கர்த்தருடைய மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக!.

இயேசுவின் பணியில்

L. Vincentraj

(சகோ L.வின்சென்ட்ராஜ்)





# தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவை நிறைவாக்குவார்

சகோதரர்
L.வின்சென்ட்ராஜ்

**என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். பிலிப்பியர் 4:19**

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் இயேசு வாழ்கிறார் ஊழியத்தின் சார்பாக புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரை உங்களை பராமரித்து, பாதுகாத்து குறைவில்லாமல் நடத்தினதை காட்டிலும், இந்த புதிய வருஷத்தில் அதிகமாக உங்களை ஆசீர்வதித்து வழி நடத்துவார். இந்த வருஷம் உங்களுக்கு மேன்மையும், சிறந்ததும், உயர்வானதாகவும் இருக்கட்டும். தேவன் நமக்கு கொடுக்கிற வார்த்தை வாக்குத்தத்தம் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் அவருடைய மகிமையிலே நிறைவாக்குவார், பூர்த்தி செய்வார், நிறைவேற்றுவார் என்று சொல்லுகிறார். அவரிடத்தில் திரளான பொக்கிஷங்கள் உண்டு, புதையல்கள் உண்டு. **ஏசாயா 45:4-ல் வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன்; நான் என் தாசனாகிய யாக்கோபினிமித்தமும், நான் தெரிந்துகொண்ட இஸ்ரவேலினிமித்தமும், நான் உன்னைப் பெயர்சொல்லி அழைத்து, நீ என்னை அறியாதிருந்தும், உனக்கு நாமம் தரித்தேன்** என்றார். அவரை நாடுகின்ற, பற்றிக் கொள்ளுகின்ற, தேடுகிறவர்களுக்கு என்று தேவன் சகல மேன்மைகளையும், உயர்வையும், ஆசீர்வாதத்தையும் வைத்திருக்கிறார். எல்லாருக்கும் அல்ல, அவரை தேடாதவர்களுக்கு அல்ல, அவரை நம்பாதவர்களுக்கு அல்ல, அவரை பின்பற்றாதவர்களுக்கு அல்ல. **ரோமர் 10:12-ல் யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை, எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார்** என்று வேதம் சொல்லுகிறது. இந்த வருஷத்தில் அவரைத் தேடி, நாடி பற்றிக் கொண்டு, பின்பற்றுகின்ற யாவரையும் தேவன் வானத்தின் பலகனிகளைத் திறந்து இடம் கொள்ளாமல் போகும் மட்டும் ஆசீர்வதிப்பார். இதைத்தான் தேவன் நமக்கு வாக்குப்பண்ணி இருக்கிறார். இப்போது மட்டுமல்ல எப்போதும் நமக்கு வாக்குபண்ணி இருக்கிறார். நேற்றைக்கும், இன்றைக்கும், நாளைக்கும் வாக்குப் பண்ணியிருக்கிறார். **உபாகமம் 28:12-ல் வாசித்து பாருங்கள் ஏற்றகாலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யவும், நீ கையிட்டுச் செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார். நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய் என்றார்.**

இன்றைய மனிதர்கள் குறைவில்லாமல் வாழவும், பற்றாக்குறை இல்லாமல் ஜீவிக்கவும் தான் தேவன் அவர்களைப் பூமியிலே ஏற்படுத்தினார். ஆனால் மனிதர்கள் குறைவுபட்டு போகிறார்கள், பற்றாக்குறையோடு போராடுகிறார்கள், தேவைகளோடு தத்தளிக்கிறார்கள். **ஏசாயா 40:26-ல் உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள், அவைகளைச் சிருஷ்டித்தவர் யார்? அவர் அவைகளின் சேனையை இலக்கத்திட்டமாகப் புறப்படப்பண்ணி, அவைகளையெல்லாம் பேர்பேராக அழைக்கிற வராமே, அவருடைய மகா பெலத்தினாலும், அவருடைய மகா வல்லமையினாலும்,**

அவைகளில் ஒன்றும் குறையாமலிருக்கிறது என்றார். அந்த தேவன் இந்த புதிய வருஷத்திலே உங்களை சகல காரியங்களிலும் விருத்தியாக்குவார். முன்னேறும்படி செய்வார். வேதத்தை வாசித்து பாருங்கள் ஏழையாய் இருந்தவனை செல்வந்தனாக உயர்த்தினார். செல்வந்தர்களை ஏழைகளாக மாற்றினார். ஆதியாகமம் 26:13-ல் அவன் ஐசுவரியவானாகி, வரவர விருத்தியடைந்து, மகா பெரியவனானான். ஈசாக்கு ஐசுவரியவானாக வர வர விருத்தி அடைந்து மகா பெரியவனானான். ஆம் அவர் எளியவனை குப்பையில் இருந்து உயர்த்துகிறார். ஆடு மேய்த்த தாவீதை, காடுகளில் வாழ்ந்த, வனாந்தரத்தில் அலைந்து திரிந்தவனை ராஜாவாக்கி ஐசுவரியவானாக்கி மேன்மைப் படுத்தினார். ஆபிரகாமை சீமானாக்கி, செல்வந்தர் ஆக்கி மேன்மைப்படுத்தி உயர்த்தினார். அந்த தேவன் இந்த வருஷத்திலே உங்கள் வாழ்க்கைக்கும் ஒரு திருப்பு முனையை கொண்டு வருவார். ஒரு மேன்மையை கொண்டு வருவார். உங்களை உயர்த்துவார். இன்றைக்கு ஐசுவரியமும் கனமும் நம்முடைய திறமையினாலேயோ, படிப்பு, பட்டத்தாலேயோ வராது. அது தேவனால் மாத்திரமே வரும். அதுதான் நிலைத்து நிற்கும். தாவீது ராஜா சொல்லுகிறார் 1 நாளாகமம் 29:12-ல் ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது. தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர். உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு. எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும் என்றார். தேவனால் வருகிறது தான் நிலை நிற்கும். சமாதானத்தை தரும். ஆகவேதான் சாலொமோன் ஞானியும் சொல்லுகிறார் நீதிமொழிகள் 10:22-ல் கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும். அதனோடே அவர் வேதனையைக் கூட்டார் என்றார்.

இன்றைக்கு இந்த மாத இதழை படிக்கின்ற என் அன்பு சகோதர சகோதரிகளே இந்த புதிய வருஷத்திலே, வரும் நாட்களிலே, மாதங்களிலே தேவன் உங்களுக்கு ஒரு மேன்மையும், உயர்வையும் தருவார். வேலையில்லாத உங்களுக்கு, தொழில் இல்லாத உங்களுக்கு, வீடு இல்லாத உங்களுக்கு தேவன் புதிய காரியங்களை செய்வார். உபாகமம் 8:18-ல் உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக. அவரே உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தம்முடைய உடன்படிக்கையை உறுதிப் படுத்தும்படி, இந்நாளில் உனக்கு உண்டாயிருக் கிறதுபோல, ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர் என்று சொல்லப்பட்டுள்ளது.ஆகவே தம்முடைய ஐசுவரிய பொக்கிஷ சாலையைத் திறந்து உங்களை ஆசீர்வதித்து, குறைவில்லாமல் சகல நன்மைகளினாலும் இந்த புதிய வருஷம் உங்களை திருப்தியாக்கி நடத்துவார். நீதிமொழிகள் 8:18-ல் ஐசுவரியமும், கனமும், நிலையான பொருளும், நீதியும் என்னிடத்தில் உண்டு என்றார். இப்படி நம்மை உயர்த்த, மேன்மைப்படுத்த தான் இயேசு இந்த பூமிக்கு இறங்கி வந்து நம்முடைய தரித்திரத்தின் சாபத்தை, ஏழ்மையின் சாபத்தை உடைத்து நம்மை ஆசீர்வதித்தார். 2 கொரிந்தியர் 8:9-ல் வேதம் சொல்லுகிறது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக் கிறீர்களே, அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே, ஏழை ஆனாரே என்று சொல்லப்பட்டுள்ளது. இன்றைக்கு இந்த செய்தியை வாசிக்கின்ற என் அன்பு சகோதர, சகோதரிகளே வானமும் பூமியும் ஒழிந்தாலும் என் வார்த்தை ஒழியாது என்ற வார்த்தையின் படி இந்த நாளிலே இதை வாசிக்கின்ற, நம்புகின்ற உங்களுக்கு தேவன் மகிமையான காரியங்களைச் செய்து ஆசீர்வதித்து வழிநடத்த போகிறார். போகட்டும் எந்த ஐசுவரியம் யாரால் வரும், ஐசுவரியம் எதற்கு நமக்கு கொடுக்கப் படுகிறது என்பதை பார்ப்போம்.

## தேவனிடத்தில் ஐசுவரியவான்களாயிருங்கள்

தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார் லூக்கா 12:21. இன்றைக்கு ஐசுவரியம் என்று மனிதர்கள் நினைப்பது உலகப்பிரகாரமான வசதிகளான கார், பங்களா, சுகபோக வாழ்க்கை என்பது தான். இது இருந்தால் போதும் என்னுடைய பார்வையிலும், மற்றவர்கள்

பார்வையிலும் நான் விலையேறப் பெற்றவன், மதிப்பிற்குரியவன், கனத்திற்குரியவன் என்று நினைக்கிறோம் அது அல்ல. தேவனுக்கு முன்பாக ஐசுவரியவானாக இருக்க வேண்டும். தமிழில் ஒரு பழமொழி சொல்வார்கள் அருள் இல்லாதவர்களுக்கு அவ்வுலகில்லை, பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலகில்லை என்பார்கள். ஆம் அருளும் வேண்டும், பொருளும் வேண்டும் இதைக் குறித்து ஆண்டவராகிய இயேசு சொல்லியிருக்கிறார் லூக்கா 12:33,34-ல் உங்களுக்கு உள்ள வைகளை விற்றுப் பிச்சைகொடுங்கள். பழமையாய்ப் போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்து வையுங்கள். அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் என்றார். பரலோக ராஜ்யம் ஒரு தேவபிள்ளைக்கு ரொம்ப முக்கியம். உங்கள் உழைப்பால், உங்கள் பிரயாசத்தினால் தேவனுடைய ராஜ்யம் கட்டப்பட வேண்டும். தேவனை அறியாத ஜனங்கள் உங்கள் மூலமாய் கர்த்தரை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதற்குத்தான் கர்த்தர் நம்மை இரட்சித்து, அபிஷேகித்திருக்கிறார். ஆனால் நாமோ வேலை வேலை, பணம் பணம் என்று ஓடிக் கொண்டிருக்கிறோம். நாம் வளமாய், செழிப்பாய் பூமிக்குரிய காரியத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தேவனுக்கு முன்பாக தரித்திரராக, ஜெபிக்க தெரியாதவர்களாக, ஊழியம் பண்ணி ஆத்துமாக்களை அறுவடை செய்யாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் தேவனுக்கு முன்பாக குறையுள்ளவர்களாக, தராசிலே நிறுக்கப்பட்டால் லேசானவர்களாக காணப்படுகிறோம். அதனால் தான் தேவன் அவ்வப்போது நம்முடைய ஆவிகளை நிறுத்துப் பார்க்கிறார் என்று நீதிமொழிகள் 16:2-ல் மனுஷனுடைய வழிகள் எல்லாம் அவனுடைய பார்வைக்கு சுத்தமானவைகள் கர்த்தரோ ஆவிகளை நிறுத்துப் பார்க்கிறார் என்று வேதம் சொல்லுகிறது.



நாம் தேவனுக்கு முன்பாக பலன் உள்ளவர்களாக, அவருக்கு முன்பாக ஐசுவரியம் உள்ளவர்களாக வாழ வேண்டும். இதைத்தான் உண்மையான, நிலையான ஐசுவரியம் என்று வேதம் சொல்லுகிறது. யாக்கோபு 2:5-ஐ வாசித்துப் பாருங்கள் என் பிரியமான சகோதரரே, கேளுங்கள், தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொள்ளவில்லையா? ஆம் நம்மை அவருடைய விசுவாசப் பிள்ளைகளாக, அவரை நம்பி மேன்மை அடைகின்ற பிள்ளைகளாக நம்மை மாற்றுகிறார். அவருடைய மேன்மையின் ஐசுவரியம் என்றால் என்ன? ரோமர் 11:33-ல் ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்! என்று சொல்லப்பட்டுள்ளது. இயேசுவின் ஐசுவரியத்தைப் பற்றி வேதம் சொல்லுகிறது எபேசியர் 1:7-ல் அவருடைய கிருபையின் ஐசுவரியம் என்று சொல்லப்பட்டுள்ளது. எபேசியர் 2:4-ல் இரக்கத்தின் ஐசுவரியம் என்று சொல்லப்பட்டுள்ளது. எபேசியர் 2:6-ல் மகாமேன்மையின் ஐசுவரியம் என்று சொல்லப்பட்டுள்ளது. எபேசியர் 3:8-ல் கிறிஸ்துவின் அளவற்ற ஐசுவரியம் என்று சொல்லப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட மேன்மையான பரலோக ஐசுவரியத்தை நாடாமல், தேடாமல் சும்மா இந்த மண்ணையும், பொன்னையும் தேடிக் கொண்டிருக்கிறோம். இந்த பூமிக்குரிய ஐசுவரியம் எல்லாம் நிலையற்றது. இதைத்தான் பவுல் எழுதுகிறார் 1 தீமோத்தேயு 6:17-ல் இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தை யுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத் தின்மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும்

நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்க வேண்டும். இதைத்தான் பவுல் பிலிப்பியர் 4:19-ல் என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் என்றார்.

உங்களுடைய ஐசுவரியத்தின்படி அல்ல. அவருடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவை கிறிஸ்து இயேசுவுக்குள் நிறைவாக்குவார் என்று வேதத்தில் சொல்லப் பட்டுள்ளது. அந்த ஐசுவரியம். இயேசுவின் ஐசுவரியம் நமக்கு உண்டாயிருக்க வேண்டும். இதுதான் பரலோகத்தில் நம்மை தேவனுக்கு முன்பாக நிறுத்தி குறைவில்லாத ஒரு வாழ்க்கையை கொண்டு வரும். இதைத் தான் பவுல் எழுதுகிறார் கொலோ 3:2-ல் பூமியிலுள்ளவைகளையல்ல. மேலானவை களையே நாடுங்கள் என்றார். இன்றைக்கு தேவனுக்கு முன்பாக நம்முடைய வாழ்க்கை. கிரியைகள் நிறைவாக. பரிபூரணமாக இருக்கிறதா? அல்லது குறைவாக இருக்கிறதா? தேவனுக்கு முன்பாக ஐசுவரியவான்களாக இருப்போம். உலகத்தை ஆண்ட மகா அலெக்சாண்டர் வியாதிப்பட்டு உயிருக்காக போராடினார். அப்பொழுது தன் மந்திரிமார்களை அழைத்து மூன்று காரியங்களைச் சொன்னார் 1. நான் மரித்த பின்பு என் சவப்பெட்டியை மருத்துவர்கள் தான் தூக்கிச் செல்ல வேண்டும் காரணம் மருத்துவம் என்னை காப்பாற்ற வில்லை. 2. நான் சம்பாதித்து சேகரித்த எல்லா வற்றையும் ரோட்டில் எறிந்து விட வேண்டும் காரணம் நான் பிறந்த போது ஒன்றும் கொண்டு வரவில்லை, மரிக்கும்போது எதையும் எடுத்துக் கொண்டு போகிறதில்லை. 3. என் கையை சவப்பெட்டிக்கு வெளியே நீட்டி வைக்க வேண்டும். நான் ஒன்றையும் இங்கிருந்து எடுத்து போக மாட்டேன் என்று சொன்னார்.

அந்தக் காலத்தில் தேவனை நேசித்து அவரை பின்பற்றினவர்கள் எல்லாரும் தேவனுக்காக தங்கள் ஐசுவரியத்தை துறந்து. இழந்து தேவனுக்காக வாழ்ந்தார்கள். ஆபிரகாம் எல்லாவற்றையும் விட்டு விட்டு தேவனை பின்பற்றினான். எலிசா அந்த காலத்தில் பெரிய பணக்காரர். பன்னிரெண்டு ஏர் மாடுகளை விட்டு விட்டு தேவ ஊழியத்திற்கு வந்தார். 1 இராஜாக்கள் 19:19 அப்படி சொல்லுகிறது. பவுல் ஆசியாவிலேயே பெரிய பணக்காரர். அந்த காலத்தில் ரோம நாட்டு பட்டமும். குடியுரிமையும் வாங்க வேண்டுமானால் 250 கோடி சொத்துக்கு அதிபதியாக இருக்க வேண்டும். அந்த ஐசுவரி யத்தினாலே அவர் ரோமன் என்ற பட்டத்தை பெற்றார். அப்போஸ்தலர் 22:27,28-ல் அப்பொழுது சேனாபதி பவுலினிடத்தில் வந்து: நீ ரோமனா? எனக்குச் சொல் என்றான். அதற்கு அவன். நான் ரோமன்தான் என்றான். சேனாபதி பிரதியுத்தரமாக. நான் மிகுந்த திரவியத்தினாலே இந்தச் சிலாக்கியத்தைச் சம்பாதித்தேன் என்றான். அதற்குப் பவுல். நானோ இந்தச் சிலாக்கியத் திற்குரியவனாகப் பிறந்தேன் என்றான். அவ்வளவு மேன்மையான ஐஸ்வரியத்தை தேவனுக்காக துறந்து தேவ வல்லமையை பெற்று ஆசியா கண்டத்தை கர்த்தருக்குள் கொண்டு வந்தார். ஆகவே தான் சொல்லுகிறார் எனக்கு லாபமாய் இருந்த எல்லாவற்றையும் நஷ்டமாக குப்பையாக எண்ணுகிறேன் என்றார். இப்படிப்பட்ட வாழ்க்கை தான் தேவனுக்கு முன்பாக செல்வம். ஐசுவரியம். இந்த புதிய வருஷத்திலே என் தேவன் மேலே வானத்திலும் கீழே பூமியிலும் உள்ள ஆசீர்வாதங்களினால் உங்களை நிரப்பி ஆசீர்வதித்து அவருடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவை நிறைவாக்குவார்.

## ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வைக்காதீர்கள்

கொடுமையை நம்பாதிருங்கள். கொள்ளையினால் பெருமைபாராட்டாதிருங்கள். ஐசுவரியம் விருத் தியானால் இருதயத்தை அதின்மேல் வைக்கா தேயுங்கள் சங்கீதம் 62:10. இந்த புதிய வருஷத்திலே தேவன் தம்முடைய ஐசுவரியத்தின் படி உங்கள் குறைவுகள் எல்லாம் நிறைவாக்குவார் என்று பார்த்தோம். எது ஐசுவரியம், எந்த ஐசுவரியம் என்பதை பார்த்தோம். தொடர்ந்து நாம் ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வைக்கக் கூடாது. அதுதான் எனக்கு எல்லாம் என்று நினைக்கக்கூடாது. ஆதி திருச்சபை கிறிஸ்தவர்கள் தங்களுக்கு உண்டான உடமை. பொருள். சொத்து எல்லாவற்றையும் அப்போஸ்தலர் பாதத்தில் வைத்துவிட்டு தேவனே போதுமென்று கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும்

துறந்து, இழந்து வாழ்ந்தார்கள். எல்லாவற்றையும் விட்டு விட்டு எழுப்புதலுக்காக ஓடினார்கள். பிரயாசப்பட்டார்கள். அப் 2:44,45 அப்படிச் சொல்லுகிறது விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள் காரணம் தேவனை தங்கள் பொருளாக, ஐசுவரியமாக வைத்திருந்தார்கள். நம்முடைய மனம், இருதயம் ஐசுவரியத்தைச் சார்ந்து வாழக்கூடாது. கர்த்தரையே நம்முடைய பங்காக, சொத்தாக வைத்திருக்க வேண்டும். இதைத்தான் தாவீது சொல்லுகிறார் சங்கீதம் 16:5-ல் கர்த்தர் என் சுதந்தரமும் என் பாத்திரத்தின் பங்குமானவர், என் சுதந்தரத்தை தேவரீர் காப்பாற்றுகிறீர். இதுதான் நம்மை விட்டு எடுபடாத நல்ல பங்கு. அதை விட்டு விட்டு நாம் ஐசுவரியத்தின் மயக்கத்தினால் மாயையில் வாழக்கூடாது. இதைத்தான் ஆண்டவராகிய இயேசு சொன்னார் மாற்கு 4:18-ல் வசனத்தைக் கேட்டும், உலகக் கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும், மற்றவைகளைப்பற்றி உண்டாகிற இச்சைகளும் உட்பிரவேசித்து, வசனத்தை நெருக்கிப்போட, அதினால் பலனற்றுப்போகிறார்கள். இவை தேவனை விட்டு நம்மை தூரப்படுத்துகிறது. ஆகவே ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வைக்காமல் ஐசுவரியத்தைக் கொடுக்கிற தேவன் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும். இதைத்தான் பணக்கார வாலிபனை பார்த்து இயேசு சொன்னார் மாற்கு 10:24-ல் சீஷர்கள் அவருடைய வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். இயேசு பின்னும் அவர்களை நோக்கி: பிள்ளைகளே, ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறது எவ்வளவு அரிதாயிருக்கிறது! என்றார்.



இன்றைக்கு இந்த செய்தியை வாசிக்கின்ற என் அன்பு சகோதர, சகோதரிகளே ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கையாயிராமல், கர்த்தர் மேல் நம்பிக்கையாய் இருந்து அவரை பின்பற்றுங்கள். இதைத்தான் தேவன் பணக்கார வாலிபன் இடத்தில் எதிர்பார்த்தார். எல்லாவற்றையும் விட்டு விட்டு ஐசுவரியத்திற்காக ஊழியம் பண்ணாமல், காலத்தை வீணடிக்காமல், உன்னுடைய உழைப்பை, உன்னுடைய பலத்தை, உன்னுடைய வாழ்க்கையை எனக்காக செலவிடு என்றார். அவன் அதை செய்ய மனதில்லாமல் மிகுந்த துக்கத்தோடு போய்விட்டான் என்று மாற்கு 10:22-ல் பார்க்கிறோம். இன்றைக்கு நாம் யாருக்கு சேவை செய்கிறோம், யாருக்கு ஊழியம் செய்கிறோம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்காகவா? அல்லது செல்வத்திற்காகவா? உலகத்திற்காகவா? எதற்காக நாம் அவரை பின்பற்றுகிறோம். அவருடைய ராஜ்யத்திற்காக, அவருடைய மகிமைக்காக வாழ நம்மை அர்ப்பணிக்க வேண்டும். ஆகவேதான் இயேசு சொன்னார் மத்தேயு 6:24-ல் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது, ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான், அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டை பண்ணுவான், தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது என்றார். ஆகவே இந்த புதிய வருடத்தில் உன்னதமான கர்த்தரையே உங்களுக்கு ஐசுவரியமாக, செல்வமாக வைத்து அவர் மீது உங்கள் வாழ்க்கையை கட்டி எழுப்புங்கள். இதற்காகத்தான் அவர் இந்த பூமிக்கு ஐசுவரிய சம்பன்னராக வந்தார். அந்த ஆண்டவராகிய தேவன் இந்த புதிய ஆண்டிலே எல்லா வெறுமையையும் மாற்றி சகல நன்மைகளாலும் உங்களை நிரப்பி இடம் கொள்ளாமல் போகும் மட்டும் ஆசீர்வதித்து நடத்துவார். இந்த புதிய வருஷத்திலும் நம்முடைய தேவன் கிறிஸ்து இயேசுவுக்குள் சகல குறைவுகளையும் போக்குவார் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்களை மேன்மைப்படுத்துவாராக! ஆமென்.

# நான் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து உன்னை எடுத்தேன்



சகோதரி.
கலா வின்சென்ட்ராஜ்

**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

கடந்த வருடமெல்லாம் நம்மை கண்மணி போல காத்து, ஒரு புதிய ஆண்டை நாம் காணும்படி செய்கிற ஆண்டவருக்கு நன்றி. கடந்து வந்த பாதைகளெல்லாம் எத்தனை வேதனைகள்! கண்ணீர்கள்! பற்றாக்குறைகள், மிகக்கடினமான பாதைகள், நிந்தைகள், அவமானங்கள், நாம் நேசித்தவர்களின் பிரிவினைகளால் உண்டான மனசஞ்சலங்கள் எல்லாவற்றிலும் நம் கூட இருந்து நம்மையும் ஒரு பொருட்டாக எண்ணி நம்மை பாதுகாத்து வழிநடத்தின நம் அன்பு இரட்சகருக்கு நன்றி. இந்த புதிய வருடத்திலும் நம்மோடு இருந்து நம்மை நடத்திச் செல்ல அவர் போதுமானவர். ஏனென்றால் அவர் தான் நமக்கு எல்லாமே பொறுப்பு. நமக்குண்டான எல்லாவற்றையும் அவர் தான் நமக்குச் செய்ய வேண்டும். அவர் தான் நம்மைப் பார்த்துச் சொல்கிறார் **ஏசாயா 41:9-ல் நான் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து, உன்னை எடுத்து, அதின் எல்லைகளிலிருந்து அழைத்துவந்து, நீ என் தாசன், நான் உன்னைத் தெரிந்து கொண்டேன், நான் உன்னை வெறுத்து விடவில்லை என்று சொன்னேன்** என்கிறார். எத்தனை மேன்மையான தெய்வம் நம்மோடு இருக்கிறார். நாம் இந்த பூமியில் தாமாக தோன்றி விடவில்லை. நம்மை வானத்தையும், பூமியையும் உண்டாக்கின தெய்வம் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து எடுத்தார்.ஆதி 3:19-ல் பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய், நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார். 23 ஆம் வசனத்தில் **அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார்** என்று வாசிக்கிறோம். **ஆதி 2:23-ல் அப்பொழுது ஆதாம், இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள், இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள்** என்று பார்க்கிறோம். ஆணும், பெண்ணும், நாம் யாராயிருந்தாலும் மண்ணிலிருந்து எடுக்கப்பட்டவர்கள். கர்த்தர் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து நம்மை எடுத்தார். அவர் அப்படி எடுத்ததற்கு ஒரு நோக்கமுண்டு. **இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன், இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள் என்று ஏசாயா 43:21-ல்** சொல்கிறார். தமது சுவாசத்தை ஊதி ஜீவன் பெற்றுக் கொள்ளச் செய்து வாழ வைத்தார். அவருக்காக அவர் மகிமையைப் பரப்ப நம்மை ஏற்படுத்தினார். ஆபிரகாமை ஒருவனாயிருக்கையில் அழைத்து அவனை ஆசீர்வதித்து, அவனை தாம் வாக்குத்தத்தம் பண்ணின கானானுக்கு கொண்டு வந்து சுதந்தரிக்கச் செய்தார். நம்மையும் எடுத்து அழைத்து வந்து நீ என் தாசன், நான் உன்னைத் தெரிந்து கொண்டேன், நான் உன்னை வெறுத்து விடவில்லை என்கிறார். நம்மை எடுத்து, நமக்கு என்ன செய்தார், நம் முற்பிதாக்கள் வாழ்வில் என்ன செய்தார் என்று தான் பார்க்கப் போகிறோம்

## சிறுமையிலிருந்து எடுத்தார்

நமக்கு எத்தனையோ விதங்களில் சிறுமை ஏற்படுகிறது. சிறுமை என்றால் தாழ்த்தப்படுதல். அது நம் மூலமாகவோ, மற்றவர்களாலோ நமக்கு ஏற்படலாம். இஸ்ரவேலர் தேவனுக்கு விரோதமாய் பொல்லாப்பான காரியங்களைச் செய்ததால் மீதியானியர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள். மீதியானியர் இஸ்ரவேலின் அத்தனை நன்மைகளையும் பறித்துக் கொண்டு ஒன்றுமில்லாதவர்களாய் விட்டு விட்டார்கள். நியாயா 6:6-ல் **இப்படி மீதியானியராலே இஸ்ரவேலர் மிகவும் சிறுமைப்பட்டார்கள். அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள்.** கர்த்தர் கிதியோனை எழுப்பி அவர்களை இக்கட்டுக்களுக்கு விலக்கி இரட்சித்தார். அவர்கள் சிறுமையிலிருந்து காப்பாற்றப்பட்டார்கள். நம் வாழ்விலும் ஏதோ ஒரு பாவமோ, மீறுதலோ நம்மை மேற்கொண்டு விடும் போது சில சிறுமைகள் வரலாம். சில சிட்சைகளைக் கொடுத்து ஆண்டவர் நம்மை சீர்படுத்துவார். சங் 107:41-ல் **எளியவனையோ சிறுமையினின்று எடுத்து, உயர்ந்த அடைக்கலத்திலே வைத்து, அவன் வம்சங்களை மந்தையைப் போலாக்குகிறார்.** நாம் எந்தவித சிறுமையின் பாதையில் போனாலும், இயேசு நம்மை இரட்சித்துக் காப்பாற்ற இன்றும் மனதுருக்கத்தோடு இருக்கிறார். நம்மை அந்தச் சிறுமையிலிருந்து எடுக்கத்தான் விரும்புகிறார்.

யோசேப்பின் வாழ்வைப் பாருங்கள். பிறந்ததிலிருந்தே பாடுகள். சொந்த சகோதரரால் பகைக்கப்பட்டான். குழியில் போடப்பட்டான். எகிப்துக்கு விற்கப்பட்டு, அடிமையாய் வேலை செய்து, பொய்க் குற்றம் சாட்டப்பட்டு சிறைக்குச் சென்றான். கர்த்தரோ அவனை, அவன் சிறுமையிலிருந்து எடுத்தார். எகிப்துக்கு அதிகாரியாக்கி, கேட்பாரற்று அநாதையாய் இருந்த அவனுக்கு கர்த்தரே முன்னின்று திருமணத்தை நடத்தி வைத்து பிள்ளைகளைக் கொடுத்தார். ஆதி 41:52-ல் **நான் சிறுமைப்பட்டிருந்த தேசத்தில் தேவன் என்னைப் பலுகப் பண்ணினார் என்று சொல்லி, இளையவனுக்கு எப்பிராயீம் என்று பேரிட்டான்.** இவ்வளவு சிறுமைப்பட்டிருந்த அவனை தேவன் எடுத்து உயர்ந்த அடைக்கலத்திலே வைத்து அவன் வம்சத்தை மந்தையைப் போலாக்கினார். அவனோ உயிர்பிழைப்பானோ? என்று குழியில் போடப்பட்டவன். ஆனால் குழியிலிருந்து அவனை எடுத்து, அவன் வம்சத்தை ஆசீர்வதித்துப் பெருகப் பண்ணினார். அதே தேவன் நம் கூடவும் இருந்து நம்முடைய சிறுமையிலிருந்தும் எடுத்து உயர்ந்த அடைக்கலத்திலே வைத்து, நம்மைப் பெருகவும், பலுகவும் செய்வார். நம்முடைய வாழ்வில் உள்ள அத்தனை சிறுமைகளும் நீங்க கர்த்தரை நோக்கி கூப்பிட, ஜெபிக்க ஆரம்பிப்போமானால் நம்மை தேவன் காப்பாற்றி சிறுமையிலிருந்தும் எடுத்து உயர்ந்த அடைக்கலத்தில் வைப்பார்.

## புழுதியிலிருந்து எடுத்தார்

இதுவும் ஒரு தாழ்ந்த நிலைமை தான். எரேமியாவின் வாழ்வைப் பாருங்கள். ஆண்டவர் சொல்ல சொன்ன வார்த்தையை, அவன் சொன்ன போது நன்மையாக அல்ல தீமையாகச் சொல்லி விட்டீர் என்று, அவனை ஒரு பாழடைந்த துரவிலே போட்டு விட்டார்கள். அது தண்ணீர் இல்லாத உளையாயிருந்தது. அந்த உளையிலே எரேமியா அமிழ்ந்தினான் என்று எரே 38:6-ல் வாசிக்கிறோம். ஒரு பிரதானியின் பரிந்து பேசுதலால் உளையிலிருந்து காப்பாற்றப்பட்டான். அந்த துரவிலிருந்து அவனை தூக்கி எடுத்து விட்டார்கள் அதனால் தான் சங்கீதக்காரன் சங் 30:9-ல் **நான் குழியில் இறங்குகையில் என் இரத்தத்தால் என்ன லாபமுண்டு? புழுதி உம்மைத் துதித்து, உமது சத்தியத்தை அறிவிக்குமோ? என்கிறான்.** அன்னாள் வாழ்வில் இப்படித்தான் குழந்தை இல்லாததினிமித்தம் குழியில் இறங்குவது போல் ஒவ்வொரு நாளும் அவமானம், நிந்தை, பரிகசிப்பு இதில் அவள் போய்க் கொண்டிருந்தாள். ஆனால் கர்த்தரை நோக்கி அவள் தன் இருதயத்தை ஊற்றி ஜெபித்த போது கர்த்தர் அந்த அவமானம் என்ற குழியிலிருந்து தூக்கினார். சின்ன சாமுவேலைக் கொடுத்தார். அவள் மனமகிழ்ந்து 1 சாமு 2:8-ல் **அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார், அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும்**

பண்ணுகிறார். பூமியின் அஸ்திபாரங்கள் கர்த்தருடையவைகள், அவரே அவைகளின்மேல் பூச்சக்கரத்தை வைத்தார் என்று பாடுகிறாள். அவள் பாடிப் புகழ்ந்தபடியே சாமுவேலை ஆண்டவர் உயர்த்தினார். தாண் முதல் பெயர்செபா வரையிலும் வல்லமையின் தீர்க்க தரிசியாய் இருந்தார். தேவன் அவரை மகிமையுள்ள சிங்காசனத்தில் உயர்த்தினார். எப்பவுமே ஆண்டவர் ஒன்றுமில்லாமையிலிருந்து உருவாக்குகிறவர். இன்றைக்கு உங்கள் வாழ்வு வெறுமையாய், குப்பையாய் துடைத்துப் போடுகிற கந்தையாய் ஒரு புழுதியைப் போல இருக்கிறதா? புழுதியிலிருந்து எடுத்து உங்களை உயரமான இடத்திற்கு கொண்டு வருவார். ராஜாக்களோடும், பிரபுக்களோடும் உட்காரப்பண்ணுவார்.

## தண்ணீரிலிருந்து எடுத்தார்

திடீரென்று வெள்ளம் சூழும்போது பயங்கரமான பாதிப்பை சந்திக்க நேரிடுகிறது. சென்னை, தூத்துக்குடி பகுதியில் வெள்ளத் தினால் பாதிக்கப்பட்டவர்கள் ஏராளம். சுனாமி வந்த போது எத்தனை பாதிப்புகள். இப்படிப் பட்ட தண்ணீரில் தத்தளிக்கிறவர்களுக்கு மீட்புக் குழுவினர் போய் உதவி செய்து தூக்கி எடுத்தனர். இது போலத்தான் நம் வாழ்விலும் எதிர்பாராத வெள்ளம் போன்ற சோதனைகள் சூழ்ந்து விடுகிறது. ஏதோ வியாதி, கடன்பாரம், குடும்ப சமாதானக் குறைவு ஏற்படும் போது காப்பாற்றுவார் இல்லாமல் தடுமாறுகிறோம். இப்படி தத்தளிப்பில் போகிற நம்மை ஆண்டவராகிய இயேசு காப்பாற்றுகிறார். பேதுரு **காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து அமிழ்ந்து போகையில் ஆண்டவரே, என்னை இரட்சியும் என்று கூப்பிட்டான். உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து, அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார்** என்று மத் 14:30,31-ல் வாசிக்கிறோம்.

மோசே பிறந்த போது பிறக்கும் ஆண்பிள்ளைகளையெல்லாம் கொன்று விட வேண்டும் என்ற சட்டம் இருந்தது. ஒரு குறிப்பிட்ட காலம் வரை அவன் தாய் ஒளித்து வைத்தாள். அதன் பிறகு அவளால் முடியவில்லை. ஒரு நாணற் பெட்டியை கீழ் பூசி மோசே குழந்தையை அதில் கிடத்தி தானே கொண்டு போய் தண்ணீரில், நைல் நதியில் போட்டு விட்டாள். தண்ணீரில் போடப்பட்டவன் எதிர்காலம் இல்லாதபடி, தண்ணீரில் மூழ்கி விடுவானோ என்று திகைக்கிற போது இந்த தண்ணீரில் இருந்து எடுக்கிறவர் குழந்தையின் அருகில் சென்றார். பார்வோனின் குமாரத்தி குளிக்கச் செல்லும் போது குழந்தையைக் கண்டு இரக்கமுற்றாள் யாத் 2:10-ல் **பிள்ளை பெரிதானபோது, அவள் அதைப் பார்வோனுடைய குமாரத்தியினிடத்தில் கொண்டுபோய் விட்டாள். அவளுக்கு அவன் குமாரனானான். அவள்: அவனை ஜலத்தினின்று எடுத்தேன் என்று சொல்லி, அவனுக்கு மோசே என்று பேரிட்டாள்.** பார்வோனின் அரண்மனையில் அவன் வளர்ந்தான் கல்வி, கேள்விகள் எல்லாம் கற்று வல்லவனானான். இஸ்ரவேலை வழிநடத்தும் மேய்ப்பன் ஆனான். இன்றைக்கும் உங்கள் வாழ்விலும் தண்ணீரில் போடப்பட்டு விட்டீர்களா? உங்களுக்கு மிகவும் அருமையானவர்களால் பாதிப்படைந்து போனீர்களா? தாய் அன்பிற்கு மேலானது எதுவும் இல்லை. அந்த தாயே தண்ணீரில் போட்டது போல தண்ணீரில் தத்தளிக்கிறீர்களா? எங்கு போகிறேன் என்றே தெரியவில்லை. தண்ணீர் உள்ளே வந்து விட்டால் என்ன செய்வது என்பது போல இந்த போராட்டம் எப்போது முடிவுக்கு வரும் என்றே தெரியவில்லை அல்லது தண்ணீரைப் போல என் வாழ்க்கையில் பிரச்சனை புகுந்து விட்டது என்று இந்த துயரம் மாறும் நான் வெளியில் வர வழி இருக்கிறதா என்று கலங்குகிறீர்களா? உங்களைத் தண்ணீரிலிருந்து எடுக்கிற தேவன் உங்கள் அருகில் இருக்கிறார். மோசேயை தண்ணீரிலிருந்து எடுத்து பெரிய அரண்மனையில் கொண்டு போய் மேன்மைப் படுத்தினது போல உங்களையும் இந்த பிரச்சனை யிலிருந்து வெளியே எடுப்பார். நோவாவை நினைவு கூர்ந்தவர், யோனாவை தண்ணீருக்கு விலக்கி காப்பாற்றினவர் நம்மையும் காப்பாற்ற வல்லவர்.

## தொழுவத்திலிருந்து எடுத்தார்

பூமியின் கடையாந்தரங்களிலிருந்து நம்மை எடுத்த தேவன் தொழுவத்திலிருந்தும் எடுத்தார். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவன் பெரிய அரண்மனையில் பிறக்கவில்லை. சத்திரத்தில் இடமில்லை என்று மாடடையும் தொழுவத்தில் தான் அவர் பிறந்தார். அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்கு சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாய் எண்ணாதபடி தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். பிலி 2:6,7 அடிமையைப் போல தோன்றி

உலகின் இரட்சகரானார். பிதாவாகிய தேவன் அவரை சிலுவையின் மரண பரியந்தம் தாழ்த்த சித்தம் கொண்டார். நமக்கு விரோதமாய், கட்டளைகளை நாம் கடைபிடிக்காததால் வந்த தண்டனைகளை அவர் சுமந்து, தண்டனை தருவேன் என்ற நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராத படிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து, துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார் என்று கொலோ 2:14,15-ல் வாசிக்கிறோம்.

தொழுவத்திலிருந்து பெரிய இரட்சிப்பு பிறந்தது. மனுக்குலத்தை பாவத்திலிருந்து மீட்டு இரட்சிக்க பிதாவாகிய தேவன் இயேசுவை தொழுவத்திலிருந்து எடுத்தார்.

தேவனே ஆளுகை செய்து கொண்டிருந்த நாட்களில் எங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று ஜனங்கள் கேட்டதினாலே சவுலை ஆண்டவர் ஏற்படுத்தினார். ஆனால் அவன் இஸ்ரவேலை மேய்த்து, அவர்களுக்காக யுத்தம் செய்து அவர்களை இரட்சியாமல், தாவீதை துரத்தி தன் காலத்தை வீணடித்து விட்டான். அந்த சமயத்தில் தம்முடைய தாசனாகிய தாவீதைத் தெரிந்து கொண்டு ஆட்டுத் தொழுவங்களிலிருந்து அவனை எடுத்தார். கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த அவனை தம்முடைய சுதந்தரமாகிய இஸ்ரவேலையும் மேய்ப்பதற்காக அழைத்துக் கொண்டு வந்தார். சங் 78:70,71. தாவீதும் தன் பெற்றோர், உடன் பிறந்தவர்களோடு வீட்டில் இருக்கவில்லை. காட்டில் ஆடுகளின் பின்னே இருந்த அவனை தொழுவத்திலிருந்து எடுத்தார். இஸ்ரவேலை மேய்க்க, அவர்களை மீட்டு இரட்சிக்க, யுத்தங்களை நடத்த, எதிரிகள் கையிலிருந்து காப்பாற்ற அழைத்துக் கொண்டு வந்தார். அவன் தன் இருதயத்தின் உண்மையின் படி மேய்த்து, தன் கைகளின் திறமையினால் நடத்தினான். இஸ்ரவேலின் ராஜாவாக அரசாண்டு மேன்மை அடைந்தான். நம் வாழ்விலும் மிகவும் தாழ்மையான, எல்லாராலும் புறக்கணிக்கப்பட்ட, தள்ளப்பட்ட கல் போல இருக்கிறேன் என்கிறீர்களா? தாவீதை தொழுவத்திலிருந்து எடுத்தவர், மகிமையுள்ள சிங்காசனத்தை சுதந்தரிக்கச் செய்தவர் உங்களையும் ஒரு நோக்கத்திற்காக எடுத்திருக்கிறார். இஸ்ரவேலை மேய்க்க, தம் ஜனத்திற்காக யுத்தங்களை நடத்த, இஸ்ரவேலை ஆட்சி செய்ய தேவன் அழைத்துக் கொண்டு வருகிறார். பூமியின் கடையாந்தரங்களிலிருந்து நம்மை எடுத்து, நாம் இருக்கும் ஆழலில் இருந்து அழைத்து வந்து நீ என் தாசன் நான் உன்னை தெரிந்து கொண்டேன், நான் உன்னை வெறுத்துவிடவில்லை என் மகனே, நீ சோர்ந்து போனது என்ன? யோசேப்பை சிறுமையிலிருந்து எடுத்தார். நம்மையும் எல்லா சிறுமையிலிருந்தும் எடுப்பார். பஞ்சகாலத்தில் உணவு, தானியம் கொடுக்க, ஜனங்கள் பட்டினி இல்லாது சாப்பிட பயன்படுத்துவார்.

சாமுவேலைக் கொடுத்து அன்னாளை, புழுதியைப் போல், குப்பையைப் போல் இருந்தவளை அதிலிருந்து எடுத்தார். இன்று வரை அன்னாளை, அவளின் ஜெபத்தை நாம் நினைக்கிறோமே. தண்ணீரிலிருந்து மோசேயை எடுத்து அடிமைத்தனத்திலே சிக்கின இஸ்ரவேலரை எகிப்திலிருந்து கானானுக்கு கொண்டு வர எழுப்பினவர் நம்மைக் கொண்டு பெரிய மீட்பை விடுதலையை நமக்குள்ளும் கொண்டு வரத்தான் எழுப்புகிறார். அடிமையின் தாழ்வான, தொழுவத்திலிருந்து தாவீதை எடுத்தவர் நம்மையும் முழு உலகை மீட்க, ஆளுகை செய்ய, யுத்தங்களை நடத்தி, இரட்சிப்பை அருள தெரிந்து கொண்டு நீ என் தாசன்! உன்னை நான் வெறுக்கவில்லை, பயப்படாதே! உன்னை நான் பயன்படுத்துவேன் என்று சொல்கிறார். கடந்த காலங்களின் பாவம், சோதனை இவைகளில் புறக்கடிக்கப்பட்டு எங்கேயோ தூரத்தில் கிடக்கிறேன் என்கிறீர்களா? நெகே 1:9-ல் நீங்கள் என்னிடத்தில் திரும்பி என் கற்பனைகளைக் கைக்கொண்டு அவைகளின்படி செய்வீர்களானால் உங்களிலே தள்ளுண்டு போனவர்கள் வானத்தின் கடையாந்தரத்தில் இருந்தாலும் நான் அங்கேயிருந்து அவர்களைச் சேர்த்து என் நாமம் விளங்கும்படி நான் தெரிந்து கொண்ட ஸ்தலத்துக்கு அவர்களை கொண்டு வருவேன் என்று மோசேக்குச் சொன்னதை நினைத்தருளும் என்று நேகேமியா ஜெபிக்கிறது போல நாம் எவ்வளவு தூரம் போயிருந்தாலும் வானத்தின் கடையாந்தரங்களில் இருந்தாலும் அங்கிருந்து நம்மை எடுத்து, அழைத்து வந்து, நம்மைக் கொண்டு செய்ய நினைத்த நன்மையான திட்டங்களை செய்து முடிப்பார். என் ஆண்டவர் இயேசு தாமே நம் ஒவ்வொருவரையும் பயன்படுத்துவாராக!

# தரிசனம் நிச்சயம் நிறைவேறும், அது தாமதிப்பதில்லை



சகோதரி. பிரேமாடேவிட்

**குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது, முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது. அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு. அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை. ஆபகூக் 2:3.**

கிறிஸ்துவில் அன்பான வாலிபதம்பி, தங்கைகளே தரிசனங்களை நமக்குத் தருகிறவரும், அதை நம்முடைய வாழ்வில் நிறைவேற்றி முடிக்கிறவருமான நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெரிய நாமத்தில் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள். உங்கள் வாழ்க்கையை குறித்ததான தேவனுடைய தரிசனம் இந்த ஆண்டில் நிச்சயம் உங்கள் வாழ்வில் நிறைவேறும். இனியும் அது தாமதிப்பதில்லை. அதற்காக எதிர்பார்த்து காத்திருங்கள். காத்திருந்து, காத்திருந்து சோர்ந்து போய் விட்டீர்களா? கலங்காதீர்கள். உங்கள் தரிசனம் உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறது. குறித்த காலம், ஏற்ற நேரத்திற்காக அது ஆயத்தமாயிருக்கிறது. அதினதின் காலத்தில் சகலத்தையும் நேர்த்தியாக செய்கிற தேவன், அழகாக, சிறப்பாக உங்களுக்கு நன்மையாக நிறைவேற்றுவார். அவர் பொய் சொல்ல ஒரு மனிதனல்ல, மனமாற மனுபுத்திரனும் அல்ல. அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா? இதுவரை உங்களின் நன்மைக்காக தாமதித்திருந்தாலும் இனி அது தாமதிப்பதில்லை. ஏனென்றால் தேவன் குறித்த காலம், தயை செய்யும் வேளை வந்து விட்டது. அது பொய் சொல்லாது. நிச்சயமாகவே முடிவு உண்டு. உன் நம்பிக்கை வீண்போகாது.

## தாமதித்தாலும் நிச்சயம் நிறைவேறும்

ஆபிரகாமுக்கு ஒரு சந்ததியைத் தருவேன் என்று ஆண்டவர் சொல்லி பல ஆண்டுகள் ஆயிற்று. ஆபிரகாமும், சாராளும் நம்பிக்கையோடு காத்தி ருந்தனர். தாமதமான போது மறுபடியும் தேவன் ஆபிரகாமிடத்தில் சொன்னார் உன் மனைவியாகிய சாராள் நிச்சயமாய் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள். அவனுக்கு ஈசாக்கு என்று பெயரிடு வாயாக என்றார். மறுபடியும் ஒரு உற்பவ காலத் திட்டத்தில் நிச்சயமாய் உன்னிடத்திற்கு திரும்ப வருவேன். அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார். இதை சாராள் கேட்டவுடனே நகைத்து, நடக்குமோ, நடக்காதோ என தயக்கத் துடன் சிரித்தாலும் தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவர் என்று சந்தேகப்படாமல் முழு நிச்சயமாய் தேவனை மகிமைப்படுத்தி விசுவாசத்தில் வல்லவர்களானார்கள். தாமதங்கள் வந்து இருந்தாலும் ஆபிரகாமை குறித்த தரிசனம் குறித்த காலத்தில் நிறைவேறினது. இது போல உங்கள் வாழ்க்கையிலுள்ள ஒவ்வொரு தடைகளும் விலகும், தாமதங்கள் நீங்கும். உங்களுக்கு ஆசீர்வாதமாக தரிசனம் நிறை வேறுவதைப் பார்ப்பீர்கள். அதை அனுபவித்து தேவனை மகிமைப்படுத்துவீர்கள்.

## தரிசனம் நிச்சயம் நிறைவேறும்

நம்மை குறித்த தேவனின் நோக்கமும், திட்டமும் தான் தரிசனம். நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் நம்முடைய வாழ்க்கையிலும், தேசங்களிலும் நிறைவேறப் போவதை தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் முன்கூட்டியே வெளிப்படுத்தி அறிவிக்கிறார். சில சமயங்களில் கனவுகள் மூலமும்,

அவரோடு நெருங்கி ஐக்கியமாக இருக்கிற தேவ ஊழியர்கள் மூலமும் வெளிப்படுத்துகிறார். இந்த தரிசனங்களை அல்லது வார்த்தைகளை நாம் பெற்றுக் கொண்டவுடனே எல்லாம் நிறைவேறாது. அந்தந்த காலங்களில் நிச்சயம் நிறைவேறும். நாம் அவசரப்படுகிற விதத்தில் அல்ல, நமக்கு நன்மையான நேரத்தில், நாம் ஆசீர்வதிக்கப்படும் விதத்திலே தேவன் அதை நிறைவேற்றுவார். யோசேப்பு தாயை இழந்த போதும், தகப்பனால் அதிகம் நேசிக்கப்பட்டவன். அவன் கண்ட கனவு தகப்பனே வெறுத்துப் பேசும் அளவுக்கு ஆனது. வயலில் அறுத்த அரிகளில் தன்னுடையது நிமிர்ந்து நிற்கிறது, மற்றவர்களுடைய அரிக்கட்டுகளெல்லாம் தன்னை வணங்குவது போலவும் சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும் தன்னை வணங்குவது போலவும் கனவு கண்டான். இதனால் சகோதரர்கள் அவன்மீது பொறாமை கொண்டு, பகைத்து, குழியில் தள்ளினார்கள். பின்பு அவனை அதிலிருந்து எடுத்து எகிப்துக்கு அடிமையாக விற்றார்கள். இவன் கனவும் இவனும் என்று கேலி பண்ணி சிரித்திருப்பார்கள். ஆனால் நடந்தது என்ன? அடிமையாக விற்கப்பட்ட யோசேப்பு எகிப்துக்கு அதிபதியானான். அவன் கனவின்படியே அவன் சகோதரர்கள் அவனை வணங்கினார்கள். யோசேப்பின் உதவியால் தான் உயிர் வாழ முடிந்தது.

யோசேப்பை குறித்த தேவ நோக்கம் அவனை அதிபதியாக்கினது. இஸ்ரவேல் ஜனங்கள் அழிந்து போகாமல் காக்கப்பட்டு, அவர்கள் சந்ததியில் இயேசு பிறந்து உலகை இரட்சிக்க வேண்டும் என்ற இந்த நோக்கம் நிறைவேற யோசேப்புக்கு எத்தனை கஷ்டங்கள், குற்றச்சாட்டுகள் ஆகிலும் யோசேப்பும் தேவனுக்குப் விரோதமாய் பாவம் செய்வது எப்படி? என்று பாவத்திற்கு விலகி ஓடி வந்ததால், தேவ நோக்கம், தரிசனம் நிறைவேறினது. யோசேப்பை போல தான் நீங்களும் இருக்கிறீர்களா? கவலைப் படாதிருங்கள். யோசேப்பின் கனவு, தரிசனம் நிறைவேறினது போல, உங்கள் தரிசனம் நிச்சயம் நிறைவேறும். நீங்கள் உயர்த்தப்படுவீர்கள். நீங்களே ஆச்சரியப்படுவீர்கள்.

கிறிஸ்தவரல்லாத குடும்பத்தில் பிறந்து வாழ்ந்தாலும் இயேசுவை விசுவாசிக்கக்கூடிய ஒரு மகள் தான் எழுதப்போகும் (Foreign) Nursing Exam-யில் Pass ஆவதற்காக ஜெபிக்க சொன்னாள். மேலும் ஏற்கனவே ஒருமுறை Exam attend பண்ணி fail ஆயிட்டேன். இதுதான் கடைசி வாய்ப்பு இதை விட்டால் அடுத்த Exam எழுத முடியாது பாஸாகி விட்டால் பார்க்கிற வேலையில் permanent ஆகிடலாம். Exam Fees அதிகமான தொகை, 8 மணி நேரம் travel பண்ணி Exam Centre - க்குப் போகணும். பனி அதிகம் அதனால் Husband கார் ஓட்டணும் இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். ஆறு மணி நேரம் Exam நடக்கும், கொஞ்சம் தப்பா Answer பண்ணிட்டால் Computer Automatic -ஆ shut down ஆயிரும். 200 கேள்விகள் கேட்பார்கள் சரியா Answer பண்ணணும். வேலை செய்யும் இடத்தில் நிறைய Insult. இயேசப்பா நிச்சயம் எனக்கு உதவி செய்வார்னு நான் நம்புகிறேன். நீங்க ஜெபம் பண்ணுங்கள் என்றாள். விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் நிச்சயம் ஆண்டவர் உங்களுக்கு உதவி செய்வார். நீங்கள் Pass ஆவீர்கள் என்று சொல்லி ஜெபித்தோம். Exam நடைபெற்ற நாளிலும் ஆலயத்திற்கு சென்று ஆண்டவர் அந்த மகளுக்கு சொன்ன வசனங்களை சொல்லி உதவி தேவைப்படும் இந்த காலத்திலே உதவி செய்யும் என்று ஜெபித்தோம். மறுநாள் காலையிலே Phone பண்ணி Exam tough தான். ஆனால் நான் Exam முடிக்கிற வரைக்கும் Computer shut down ஆகவே இல்லை. இரண்டு நாளில் Result வந்துரும் என்றாள். ஆனால் ஒரே நாளில் Result வந்துருச்சு. நான் Pass ஆகிவிட்டேன் இயேசப்பா வுக்கு நன்றி என்று சொன்னாள். **"விசுவாசித் தவளே பாக்கியவதி கர்த்தராலே அவளுக்கு சொல்லப் பட்டவைகள் நிறைவேறும். லூக்கா 1:45** தேவனை மகிமைப்படுத்த அவளுக்கு வேலை கிடைத்தது. தேவனுக்கு மகிமையாக ஏறெடுக்கப்பட்ட ஜெபங் களுக்கும் பதிலும் வந்துவிட்டது. அவளைக் குறித்த தேவனுடைய திட்டமும் தரிசனமும் நிறைவேறியது இதே போல உங்களுக்கும் நிச்சயம் வெற்றியும் உயர்வும் வரும்.

இந்த புதிய ஆண்டிலே உங்கள் வாழ்க்கையின் அனைத்து காரியத்திற்காக இயேசுவை நம்புங்கள். தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையான ஈவுகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா? என்ற ஆண்டவர் இயேசு தாமே உங்கள் விருப்பங்களையும், விண்ணப்பங்களையும், உங்கள் தரிசனங்களையும் நிச்சயமாய் நிறைவேற்றி உங்களை ஆசீர்வதித்து இந்த ஆண்டு முழுவதும் பாதுகாத்து வழி நடத்துவாராக!

# கனி கொடுக்கும் வருஷம்

## ஹலோ குட்டீஸ் நல்லா இருக்கீங்களா? *HAPPY NEW YEAR*

உங்களுக்குக் கதைன்னா ரொம்ப பிடிக்கும் தானே. இயேசப்பா சொன்ன ஒரு கதையை கேட்கிறீங்களா? ஒரு எஜமானுக்கு ஒரு திராட்சைத்தோட்டம் இருந்துச்சு. திராட்சைப்பழங்கள் கொத்துக் கொத்தாக தொங்குகிறத பார்க்கவே என்ன பிரமாதமாக இருக்கே. ஆனா இந்த அத்திமரம் மட்டும் ஏன் இன்னும் ஒன்னும் காய்க்கல என்று எஜமான் சொல்லிக்கொண்டே வந்தார். அவர் வந்ததைப் பார்த்த தோட்டத்திலே வேலை செய்யும் ஐயாவும் ஓடோடி வந்து ஐயா வணக்கம் சாலோம் என்றார். எஜமான் நல்லா இருக்கீங்களா? என்று ஐயா கேட்டதும், எஜமான் நான் நல்லா இருக்கேன். ஆனால் அந்த அத்திமரம் தான் நல்லாவே இல்லையே. நானும் முதல் வருஷம் பார்த்தேன் ஒரு காயும் காய்க்கவில்லை. இரண்டாம் வருஷம் பார்த்தேன் அப்பவும் ஒன்னையும் காணோம். இப்ப இந்த மூன்றாம் வருஷமும் ஒன்னைகூட பார்க்கவே முடியலை. அதற்கு ஊத்தின தண்ணீர், போட்ட உரம் நீர் பார்த்த வேலை எல்லாம் வேஸ்டா போயிருச்சு....அதனால ஒன்னு செய்யுங்க என்று எஜமான் சொன்னதும், தோட்டக்கார ஐயா என்னங்க ஐயா செய்யனும் என்று கேட்டார். அதற்கு எஜமான் கோபமாக அதை வெட்டிப் போடுங்க, சும்மா இருந்து மண்ணுக்குப் பாரமாயிருக்குது. நம்ம மனசுக்கும் பாரமாயிருக்குது என்றார். அதற்கு தோட்டக்கார ஐயா சொன்னார் ஐயா ஐயா அப்படி மட்டும் சொல்லாதீங்க, இந்த வருஷமும் இருக்கட்டும் நான் அந்த மரத்தை சுத்தி, நல்ல கொத்தி எருப்போட்டு தண்ணீர் பாய்ச்சுறேன். நிச்சயம் அது கனி கொடுத்திடும். அப்படி அது கனி கொடுக்கலைனா, அப்புறம் வெட்டிப் போடலாம் ஐயா என்று கெஞ்சி கேட்டதினால எஜமான் சொன்னார், எனக்கு என்னமோ அந்த அத்திமரம் காய்க்கும்னு நம்பிக்கையே இல்லை. என்னமோ நீங்க சொல்றீங்கனு விடுறேன். பாடுபடுறது நீங்க தானே. சரி நான் போயிட்டு வர்றேன் என்று சொல்லி எஜமான் தோட்டத்திலிருந்து புறப்பட்டார். குட்டீஸ் நம்முடைய எஜமான் பிதாவாகிய தேவன், நம் ஒவ்வொருவருக்கும் புது வருஷத்தையும், புது நாளையும், ஆசீர்வாதங்களையும் தந்து அதிலே தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்று விரும்பி நம்மையெல்லாம் அவருடைய அத்திமரமாகவைத்திருக்கிறார்.  நாம் தேவப்பிள்ளைகளாக நடந்து கொண்டால் கனி கொடுக்கிறவர்களாக இருப்போம். கனி கொடுக்காவிட்டால்  நம்மேல் அவருடைய கோபம் வரும். அவருடைய கோபத்திலிருந்து நம்மை காப்பாற்றத்தான் பிதாகிட்ட நம் சார்பாக இயேசுவாகிய  தோட்டக்காரர் பரிந்து பேசிகிட்டு இருக்காங்க. அப்படித்தான் மன்றாடி நமக்காக 2025-இந்தப் புது வருஷத்தை கனி கொடுக்கும் வருஷமாக தந்திருக்காங்க. உரமாகிய வார்த்தையினாலும், தண்ணீராகிய பரிசுத்த ஆவியினாலும் நம்மைப் பெலப்படுத்தி, நம்மை கனி கொடுக்க வைக்கிறாங்க அதனால குட்டீஸ் நீங்களும் ஒவ்வொரு நாளும் கெட்ட காரியங்களைச் செய்யாமல் இயேசப்பாவுக்குப் பிடிச்ச காரியங்களைச் செஞ்சீங்கனா நீங்க தான் இயேசப்பாவுக்கு கனி கொடுக்கிற பிள்ளைகள். நிச்சயம் நீங்க கனி கொடுப்பீங்க. ***ALL THE BEST***.

### ஜெபம்

அன்புள்ள இயேசப்பா, இந்த 2025 புது வருஷத்தை தந்ததற்காக நன்றி. இந்த வருஷத்தின் ஒவ்வொரு நாளும் உமக்குப் பிரியமானதை செய்து, உமக்கு கனி கொடுக்கிற பிள்ளையாய் என்னை மாற்றுங்க நன்றி இயேசப்பா. இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

### மனப்பாட வசனம்

உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்,
உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக.
சங்கீதம் 143:10



# தடைகளை நீக்கிப் போடுகிறவர்



**சகோதரி. வெண்ணிலா - திருப்பத்தூர்**

எங்கள் வீட்டிற்கு மின்இணைப்புத் தேவைக்காக கடந்த 2020-ஆம் ஆண்டு EB-யில் உள்ள அதிகாரிகளிடம் மனுக்கொடுத்தோம். ஒவ்வொரு முறையும் ஏதாவது சாக்குப்போக்கு அல்லது குறைகளைச் சொல்லி இணைப்பு தர மறுத்தார்கள். கடந்த நான்கு ஆண்டுகளாக இதற்காக நாங்கள் பல அதிகாரிகளை அணுகி முறையிட்டோம். யாரும் எங்களுக்கு உதவி செய்ய முன் வரவில்லை. ஒவ்வொருவர் மூலமாக தடைகள் வந்து கொண்டே இருந்தது. நாங்கள் மிகவும் சோர்ந்து போன நிலையில் தங்களின் ஊழியத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு மின்இணைப்பு கிடைப்பதில் உள்ள தடைகள் நீங்க ஜெபிக்க கேட்டேன். தேவன் ஜெபத்திற்கு பதில் தந்தார். இந்த மாதத்தில் எங்கள் வீட்டிற்கு மின்இணைப்பு கிடைத்து விட்டது. தடைகளை நீக்கிப் போடுகிற கர்த்தர் எங்களுக்கு மின்இணைப்பு கிடைப்பதில் இருந்த எல்லாத் தடைகளையும் நீக்கி அற்புதம் செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**சகோதரி. உமா – பெங்களூர்**

என் மகனுக்கு திருமணமாகி மருமகளுக்கு குழந்தை இல்லாமல் இருந்தார்கள். மருத்து. மாத்திரைகள் எடுத்தும் எந்த பலனும் இல்லை. மிகுந்த மனஉளைச்சலில், வேதனையில் கஷ்டப்பட்டார்கள். அவர்களுக்கு தேவன் அற்புதம் செய்யவும், குழந்தை பாக்கியம் கிடைக்கவும் தங்களிடம் ஜெபிக்க கேட்டேன். தேவன் ஜெபத்தைக் கேட்டு குழந்தை பாக்கியத்தை கட்டளையிட்டார். என் மகன், மருமகள் மீது இருந்த நிந்தையை தேவன் மாற்றினார். தற்போது என் மருமகள் 5 மாத கர்ப்பிணியாக இருக்கிறார். தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்தரம்.

**சகோதரி. கலாமணி - திருப்பூர்**

என் குடும்பத்தில் நான் மாத்திரம் தான் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருந்தேன். என் குடும்பத்தினர் இயேசுவை அறியாத நிலையில், மனம் போன போக்கில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களும் தேவனைத் தேடி ஆலயத்திற்கு வர வேண்டும், அவர்கள் வாழ்க்கை சரியாக வேண்டும் என்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு தங்களிடம் ஜெபிக்க கேட்டுக் கொண்டேன். இயேசப்பா ஜெபத்தைக் கேட்டார், தற்போது என் குடும்பத்தினர் ஆலயத்திற்கு வருகிறார்கள். தேவனுக்கே மகிமை.

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார். அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகைசுவிசேஷமயமாக்குகிற அந்தமகிமையானஊழியத்தில்தமதுபிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | | | |
|---|---|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST | A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : KOCHADAI MADURAI | BRANCH | : MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA | BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 493902010001022 | A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UBIN0549398 | IFSC CODE | : UTIB0001765 |

## 2) இணையதளம்(WEBSITE)

WWW.JESUSLIVES.IN

## 3) காசோலை(CHEQUE)

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

## 4) GOOGLE PAY

: GPAY TO , 944 300 9333 ,7598359316

## 5) மணியார்டர்(E.M.O)

இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ – காலனி பரவை ,மதுரை – 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

## வாசகர்கள் கவனத்திற்கு!

இந்த வருடத்திற்கான உங்கள் சந்தாவை புதுப்பித்து தொடர்ந்து தடையில்லாமல் இயேசுவை தினம் பார்க்கிறேன் மாத இதழை பெற்றுக் கொள்ள அன்பாய் கேட்டுக் கொள்கிறோம்.

**G pay Number**
**944 300 9333**

**மணியார்டர் முகவரி,**

இயேசுவை தினம் பார்க்கிறேன்
54, A.I.B.E.A நகர், A காலனி,
பரவை, மதுரை – 625402

நடப்பு செய்தி

# இதை டிரை பண்ணுங்க.... ஹெல்தியா இருக்கலாம்!



மழைக்காலம் வந்துவிட்டாலே. கூடவே மழைக் கால நோய்களும் வர தொடங்கிவிடும். குறிப்பாக பலருக்கும் மழைக்காலங்களில் சளி பிடித்து கொள்ளும். ஒருசிலருக்கு ஒரு வாரத்திற்குள் சரியாகிவிடும். ஆனால் ஒரு சிலருக்கு சளியின் தீவிரம் அதிகமாக இருக்கும். இதற்கு வைட்டமின் பற்றாக்குறை தான் காரணம் என்று மருத்துவ நிபுணர்கள் சொல்கிறார்கள். இனி ஜனவரி. பிப்ரவரி வரை குளிர்ச்சியான காலம் தான். பொதுவாக குளிர் காலத்தில் சில குளிர் கால நோய்களும் மக்களை தாக்க தொடங்கி விடும். அதில் குளிர் காலத்தில் பொதுவாக பலருக்கும் சளி பிடிப்பது வாடிக்கையான ஒன்றுதான். சிலருக்கு சளி பிடித்தாலும் அவ்வளவு தீவிரமாக இருக்காது. எளிதாக சரியாகிவிடும்.

## வைட்டமின் பற்றாக்குறை

சிலருக்கு சளியின் தீவிரம் அதிகமாக இருக்கும். இதற்கு உடலுக்கு அவசியம் தேவைப்படும் வைட்டமின் பற்றாக்குறையும் ஒரு காரணம். அதாவது வைட்டமின் பி12 பற்றாக்குறை இருந்தால். எளிதாக உங்களுக்கு சளி பிடிக்கும். ரத்த சிவப்பணுக்கள் மறு உற்பத்தியில் வைட்டமின் பி12 முக்கிய பங்காற்றுகிறது.

## இரத்த சோகை

உடலுக்கு தேவையான ஆக்சிஜன்களை கடத்துவது இந்த சிவப்பணுக்கள் தான். வைட்டமின் பற்றாக்குறை இருந்தால் சிவப்பணுக்களை நமது உடலால் உற்பத்தி செய்ய முடியாது. எனவே பி12 பற்றாக்குறை இருந்தால் இரத்த சோகை போன்றவை ஏற்படலாம். பி12 பற்றாக்குறையும் அடிக்கடி சளி பிடிக்க ஒரு காரணம் ஆகும். வைட்டமின் பி12 பற்றாக்குறை இருந்தால் சோர்வாகவும் பலவீனமாகவும் இருக்கும்.

## அறிகுறிகள் என்ன?

குமட்டல். வாந்தி அல்லது வயிற்றுப்போக்கு ஆகியவையும் வைட்டமின் பி12 பற்றாக்குறைக்கான ஒரு காரணமாக இருக்கும். நரம்பு மண்டல செயல்பாடுகளையும், குடல் ஆரோக்கியத்தையும் பி12 பற்றாக்குறை பாதிக்கும். கவனம் செலுத்துவதில் சிரமம், அறிவாற்றல் மாற்றங்கள் ஆகியவையும் வைட்டமின் பி12 பற்றாக்குறையை காட்டும் அறிகுறிகளில் ஒன்றாகும். இது போன்ற அறிகுறிகளை நீங்கள் ஒருங்கிணைந்து உணர்ந்தீர்கள் என்றால். கொஞ்சம் அலர்ட் ஆவது அவசியம். உடனடியாக மருத்துவரை கலந்து ஆலோசித்து அவருடைய அட்வைஸை பெறுவது நல்லது. பி12 பற்றாக்குறை நீண்டகாலம் இருந்தால், உடல் ஆரோக்கியத்தில் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும்.

## என்னென்ன சாப்பிடலாம்

கொய்யாப்பழத்தில் வைட்டமின் பி12 உள்ளது. கொய்யாவில் வைட்டமின் சி, வைட்டமின் ஏ, வைட்டமின் கே, சி போலிக் அமிலம், பொட்டாசியம் மற்றும் நார்ச்சத்து போன்ற சத்துக்களும் அதிகம் நிறைந்துள்ளன. முட்டை, பால், நெய், தயிர், மீன் போன்றவற்றிலும் பி12 அதிகமாக உள்ளது.



மூணாரில்
திறப்பின்
உபவாச
ஜெபம்
ஜனவரி
04
8:00 AM- 3:00 PM
இடம்- பஞ்சாயத்து கம்யூனிட்டி ஹால், மூணார்
தொடர்புக்கு :94428 00449, 90952 54372




செம்பட்டியில்
Jesus Lives
MINISTRIES
10,11
JANUARY
9:30 AM - 2:00 PM
ஆசீர்வாத
உபவாச ஜெபம்
இடம்:
வானத்தின் வாசல்
எழுப்புதல் ஜெபமையம்,
செம்பட்டி, திண்டுக்கல்.
EVG
EVG
தொடர்புக்கு: 94428 00449, 94980 00449




Jesus Lives
MINISTRIES
திருப்பத்தூரில்
ஜனவரி
30,31
பிப்ரவரி
01
73 வது பரிசுத்த
உபவாச முகாம்
வியாழன் & வெள்ளி : 5AM TO 9PM
சனிக்கிழமை : 5AM TO 1PM
பதிவுக்கட்டணம் : 200
இடம்:
அன்றன்றுள்ள அப்பம் ஜெப மண்டபம்
கிறிஸ்துகுல ஆசிரமம், திருப்பத்தூர் மாவட்டம்
வேலூர் அருகில்
தொடர்புக்கு : 94980 00449 , 94428 00449 , 9884908777

Jesus Lives MINISTRIES

மதுரையில்

# எழுப்புதல்

## உபவாச ஜெபம்

ஜனவரி

**18**

சனிக்கிழமை

9:30AM - 2:30PM



Ev. L.VINCENTRAJ

Prophet VINCENT SELVAKUMAR

Ev. KALAVINCENTRAJ

## இடம்:

இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம்
பைபாஸ் ரோடு, பழங்காநத்தம்
**PRC Depot** அருகில், மதுரை

Location

தொடர்புக்கு :

94980 00449, 94428 00449